# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஏழாவது கூட்டத் தொடர்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

----

**மொத்த வினாக்கள் 11**

----

### ஏரிகளை இணைத்தல்

*269 **திரு. பெ.சு.தி. சரவணன் (கலசப்பாக்கம்):**

மாண்புமிகு **நீர் வளங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- கலசபாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், குப்பநத்தம் நீர்த்தேக்கம், இறையூர் மற்றும் வடமாத்தூர் ஏரிகளை இணைக்க அரசு முன்வருமா?

----

### பேருந்து நிலையம்

*270 **திருமதி எஸ். தேன்மொழி (நிலக்கோட்டை):**

மாண்புமிகு **நகராட்சி நிருவாகம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) நிலக்கோட்டை பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை நவீன வசதிகளுடன் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

----

### அலுவலகத்திற்குக் கட்டடம்

*271 **திரு. ஜி.கே. மணி (பென்னாகரம்):**

மாண்புமிகு **பொதுப் பணி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் பொதுப்பணித் துறையின் (கட்டடம் மற்றும் பராமரிப்பு) பிரிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?
ஆ) ஆம் எனில், எப்போது?

----

## நூல்களை மொழிபெயர்த்தல்

*272 **டாக்டர் நா. எழிலன் (ஆயிரம் விளக்கு):**

மாண்புமிகு **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :-
அ) பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை பிற மொழிகளில் மொழிபெயர்க்க அரசு ஆவன செய்யுமா?
ஆ) ஆம் எனில், எப்போது?

----

## பள்ளிகளில் பால் வழங்குதல்

*273 **திரு. ஜே.ஜி. பிரின்ஸ் (குளச்சல் ):**

மாண்புமிகு **சமூக நலன் - மகளிர் உரிமை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :-
அ) அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு இரு வேளையும் பால் வழங்க அரசு முன்வருமா?
ஆ) ஆம் எனில், எப்போது?

----

## நெல் கொள்முதல் நிலையம்

*274 **திரு. J.L. ஈஸ்வரப்பன் (ஆற்காடு):**

மாண்புமிகு **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :-
ஆற்காடு தொகுதி, நம்பரை ஊராட்சி, மோகனாவரம் மற்றும் விலாரி ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

- - - -

## ஆரம்ப சுகாதார நிலையம்

*275 **திரு. மு. பாபு (செய்யூர்):**

மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி, நுகும்பல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

- - - -

## குளிர்சாதனப் பேருந்து

*276 **திரு.** K. **மாரிமுத்து (திருத்துறைப்பூண்டி):**

மாண்புமிகு **போக்குவரத்து மற்றும் மின்சாரம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் முதல் சென்னை வரை அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

- - - -

## குடமுழுக்கு

*277 **டாக்டர் வை. முத்துராஜா (புதுக்கோட்டை):**

மாண்புமிகு **இந்து சமய மற்றும் அறநிலையங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :-

அ) புதுக்கோட்டை தொகுதி, திருக்கோகர்ணம், அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஷ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

- - - -

## நூலகத்திற்கு கட்டடம்

*278 **திரு. சு. ரவி (அரக்கோணம்):**

மாண்புமிகு **பள்ளிக் கல்வி** துறை அமைச்சர் கீழ்க்காணும்

வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் குடியிருப்பு பகுதியில் உள்ள ஊர்ப்புற நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

----

## போட்டித் தேர்வு பயிற்சி மையம்

*279 **திரு. நத்தம் இரா. விசுவநாதன் (நத்தம்):**

மாண்புமிகு **மனிதவள மேலாண்மைத்துறை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- நத்தம் தொகுதி, நத்தம் நகரில் போட்டித் தேர்வு பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

----

**சென்னை**-600009. **முனைவர் கி. சீனிவாசன்,**

16 **அக்டோபர்**, 2025 . **முதன்மைச் செயலாளர்**